## திருச்செந்தூர் முருகன் கோவில் யானை தாக்கி

# உயிரிழந்த இருவர் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 25 -

**தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் முருகன் கோவில் யானை தாக்கி உயிரிழந்த இருவர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர். அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் உள்ள தெய்வானை என்ற யானையின் பாகன் உதயகுமார் மற்றும் அவருடன் அவரது உறவினர் சிசுபாலன் ஆகியோர் 18.11.2024 அன்று யானையின் அருகில் இருந்தபோது யானை திடீரென திமிறி, அருகில் இருந்த பாகன் உதயகுமார் மற்றும் சிசுபாலன் ஆகிய இருவரையும் தூக்கி வீசித் தாக்கியுள்ளது.

இதில், சிசுபாலன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார். பாகன் உதயகுமார் சிகிச்சை பலனின்றி மருத்துவனையில் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வேதனை யடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த உதயகுமார் மற்றும் சிசுபாலன் ஆகிய இருவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் பகுதியில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினை மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆய்வு செய்தார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!



அரியலூர், நவ. 25-

அரியலூர் மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் அரியலூர் திருச்சி பைபாஸ் சாலையில் உள்ள வாணி மஹாலில் இன்று (25.11.2024) மாலை 5 மணிக்கு மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன் வரவேற்புரையில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது மாவட்ட துணை செயலாளர் லதாபாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம்.பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், இரா.பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாதிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் அரியலூர் தொகுதி மேலிட பார்வையாளர் முனைவர் சபாபதிமோகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் சா. சி.சிவசங்கர் ஜெயங்கொண்டம் தொகுதி மேலிட பார்வையாளர் கலா சுந்தரமூர்த்தி, குன்னம் தொகுதி மேலிட பார்வையாளர் ஏ.கே.அருண், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன்,

கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி சிறப்புரையாற்றுகிறார்கள்.

நடைபெறுகின்ற கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், ஒன்றிய பொறுப்பாளர் ப.தனவேல், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சிகழக தோழர்கள், அனைத்து அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் நன்றியுரையாற்றுகிறார்.

பொருள் 1, தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா! கழக இளைஞர் அணிசெயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா! கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்பு!

# தி.மு.க. சட்டத்துறை மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## கழக மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமை!

கோவை, நவ. 25-

திமுக சட்டத்துறை மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட திமுக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம், திமுக சட்டத்துறை இணைச்செயலாளர் கேஎம். தண்டபாணி வரவேற்புரையாற்ற, திமுக சட்டத்துறை மூத்த வழக்கறிஞர் என்ஆர். இளங்கோ தலைமை ஏற்க, தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, மறைந்த மூத்த வழக்கறிஞர் ஏ.கே.ராஜேந்திரன் திருவுருவ படத்தை திறந்து வைத்து தலைமை உரையாற்றினார். அப்போது பேசிய அமைச்சர் ; உள்ளாட்சி தேர்தலில் ஆரம்ப கட்டம் முதல், தேர்தல் முடியும் வரை இரவு பகல் பாராமல் உழைத்த சட்டத்துறையினருக்கும், அனைத்து வழக்கறிஞர்களுக்கும் நன்றி. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் ஆரம்பத்திலிருந்தே அனைத்து பணிகளையும் பார்ப்பது வழக்கறிஞர்களே, அப்போது ஏற்படும் பிரச்சினைகள் என்றாலும் சரி, வாக்குசேகரிக்கும் போதும் என்றாலும் சரி, வாக்குசான்றை கையில் பெறும் வரை வழக்கறிஞர்களின் பணி சிறப்பானது. அதேபோல், 2026 ல் கோவையின் 10 தொகுதிகள், தமிழகம் முழுவதும் 200 தொகுதிகளையும் வெற்றெடுப்போம், என்ற பெருமையினை அடைய வேண்டும். அந்த வெற்றி பயணத்தை துவங்க வேண்டும்.

மறைந்த ஏகே ராஜேந்திரன் ஆற்றிய பணிகளை புகழாரம் சூட்டியவர், அவருக்கு வீர வணக்கத்தை செலுத்துவதாக தெரிவித்தார். மாவட்டக் கழகம் சார்பில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாக மாவட்ட செயலாளர்கள் தெரிவித்துள்ளனர். பெரும்பாலும் 80 சதவீத வழக்குகள் முடி வடைந்துள்ளது. மீதம் உள்ள வழக்குகள் விரைவில் முடிக்கப்படும் என கூறினார்.

வரும் சட்டமன்ற தேர்தல் திமுகவின் எஃகு கோட்டையாக கோவை மாற வேண்டும் அந்த அளவில் நமது பணிகள் சிறப்பாக இருக்க வேண்டும். இங்கு இருக்க கூடி வழக்கறிஞர்களுடன் இணைந்து மாவட்ட நிர்வாகம் சேர்ந்து இங்கு உள்ள 10 சட்டமன்றங்களை வென்றெடுப்போம் என்ற உறுதியை கூறிக்கொள்கிறேன் என்றார்.

தொடர்ந்து சட்டத்துறை செயலாளர் இளங்கோ பேசுகையில்;

இப்போது இருந்தே நாம் கடுமையாக உழைத்தால், திமுக 56 சதவீதத்திற்கு மேல் பெற்று விடலாம். அனைவரும் ஓரணியில் இருந்து பணியாற்ற வேண்டும். பி.எல்.ஏ. 2 வில் இருக்கின்ற புரிதல், நடைமுறைகளை தெளிவுபடுத்த வேண்டும். தொகுதி பார்வையாளர்கள் அறிவிக்கப்பட்டு , வெவ்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பபடுவார்கள். அதற்கு வழக்கறிஞர்கள் தயாராக இருக்க வேண்டும். ஒரு காவல்நிலையத்திற்கு 5 லிருந்து 7 வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட உள்ளனர். தேர்தல் பணிபுரியும் வழக்கறிஞர்கள் பட்டியலை தயார் செய்து வரும் ஜனவரிக்குள் தலைமைக்கு அனுப்ப வேண்டும்.

வாக்குபதிவு எந்திரத்தை தொடர்ச்சியாக கண்காணிப்பது திமுக வழக்கறிஞர் அணி மட்டும் தான். வாக்குப்பதிவு எந்திரத்தின் புரிதலை நாம் அதிகப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும். கழக வழக்கறிஞர்கள் இப்போதே தேர்தல் கமிஷனின் விதிகளை தெரிந்து கொள்ளுங்கள் . அமைச்சர் செந்தில்பாலாஜி கோவையின் 10 தொகுதிகளையும் வெற்றி பெற்று தலைவரிடம் ஒப்படைப்பார். என்ற நம்பிக்கை உள்ளது என கூறினார்.

இந்த நிகழ்வில், தலைமை கழக வழக்கறிஞர் சரவணன், சட்டத்துறை இணைச்செயலாளர் அருள்மொழி, திமுக மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக் Ex Mla, தொ.அ. ரவி, தளபதி முருகேசன், மற்றும் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, நவ. 25-

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும் கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட வேண்டும் என்று தூத்துக்குடி - வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. P. கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. மாநில இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினமான நவ 27-ல் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் கழகத்தின், இரு வண்ணக் கொடிகளை ஏற்றியும், இனிப்புகள் வழங்கியும், கழக கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிப்பரப்பியும், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் நடத்தியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

மேலும் அன்றைய தினம் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்கள், மாற்றுத்திறனாளி இல்லங்கள், அனைத்திலும் உள்ள ஏழை-எளியோருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 27.11.2024 அன்று தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் பிறக்கும் அத்தனை குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் தூத்துக்குடியில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு தேவையான உபகரணங்கள், பள்ளி மாணவ- மாணவியருக்கு தேவை யான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட இருக்கிறது.

தி.மு.க. சார்பில் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகே பிரம்மாண்ட கேக் வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அது போல மாணவரணி சார்பில் மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு நோட் - புக் - உள்ளிட்ட தேவையான கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவில் கைப்பந்து போட்டியும், அது போல மற்ற கழக சார்பு அணிகளின் சார்பில் பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட இருக்கிறது. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் 30.11.2024 அன்று இரத்ததான முகாம் மற்றும் நலிவடைந்தோர் இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 7.12.2024 அன்று மாபெரும் பல்மருத்துவம் மற்றும் பொது மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளவும், நிகழ்ச்சிக் கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதியிலுள்ள கழக மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளை கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பாக செய்திடவும் கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர், நவ. 25 –

கழக இளைஞரணி செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட கழகத்தினருக்கு மாவட்ட செயலா- ளர்- அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அதன் விவரம் கீழ் வருமாறு:- கழக இளைஞரணி செய- லாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் 27.11.2024 அன்று கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய , நகர, பேரூர், கிளை, வார்டு, பகுதிகள் முழுவதும் கழக கொடியேற்றி, இனிப்புகள் , பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு, பேனா, புத்தகங்கள் , வழங்- கியும் , மற்றும் முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்- கியும் மிக சிறப்பாக கொண்டாட வேண்டும் எனவும்,

அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்- பினர்கள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற நாடாளு மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக, வார்டு கழக, செயலாளர்கள்- நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள்- துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நமது குடும்ப விழாவாக சிறப்பாக கொண்டாடவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெருப்புமேடு து. முத்து

### நவம்பர் 25 (2015)



இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சைதை பகுதியில் வட்ட அவைத்தலைவர், துணைச் செயலாளராக தொடர்ந்து பொறுப்பில் இருந்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், குடிநீர் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 58 நாட்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சமயநல்லூர் செல்வராஜ்

### நவம்பர் 25 (2012)



சமயநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தவர்.

“இளமைக் காலத்திலேயே, மாணவப் பருவத்திலே ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே சுயமரியாதை வீரராகத் திகழ்ந்தவர். அவர் முடிவெய்துகிற வரையில் முனை முறியாமல்; திராவிட இயக்கச் சிந்தனையாளராக சுயமரியாதைச் சுடராகத் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**